

திருச்சியில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு, மத்திய பேருந்து நிலையத்திலிருந்து மகிழம்பாடி, கூடலூர், பலூர், புள்ளம்பாடி சமயபுரம் கோவில், மன்னச்சநல்லூர், சத்திரம் பேருந்து நிலையம் வழியாக முத்தரசநல்லூர் கூடலூர் ஆகிய வழித்தடங்களில் 15 புதிய சிற்றுந்து சேவைகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதீப் குமார், மாநகர ஆனையர் சரவணன், நகராட்சி பொறியாளர் சிவபாதம்,மாவட்ட துணை செயலாளர் முத்து செல்வ ம் ,விஜயா ஜெயராஜ் , துர்கா தேவி,தொமுச மாவட்ட தலைவர் குணசேகர், டோல்கேட் சுப்பிரமணி, காஜாமலை விஜய் பகுதி செயலாளர்கள் மோகன் தாஸ், கமால் முஸ்தபா நாகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பி.ஆர். பாலசுப்பிரமணியன் கலைச்செல்வி, ராமதாஸ் ,புஷ்பராஜ், கருப்பையா , கவிதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர்கள், பகுதி செயலாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்துத்துறைகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### பரமத்திவேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிகளில்

# ரூ.84.31 இலட்சம் மதிப்பீட்டில் 4 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள்!

## அமைச்சர் மரு. மா.மதிவேந்தன் திறந்து வைத்தார்!

நாமக்கல், ஜூன் 20–

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.84.31 இலட்சம் மதிப்பீட்டில் 4 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள் துவக்க விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். திருச்செங்கோடு சட்ட மன்ற உறுப்பினர். ஈ.ஆர். ஈஸ்வரன் முன்னிலை வகித்தார்.

விழாவில் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு 4 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்களை திறந்து வைத்து பேசினார். அப்போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கடந்த 4 ஆண்டுகளில் அனைத்து தரப்பு மக்களுக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக விவசாய பெருமக்கள் பயன்பெறும் வகையில் பால் உற்பத்தியாளர்களின் நலன் காத்திட லிட்டருக்கு ரூ.3.00 வரை ஊக்கத்தொகை, கொழுப்பு நிறைந்த பாலுக்கு ரூ.1.00 கூடுதல் தொகை மற்றும் போனஸ் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ஆவின் கால்நடைத் தீவனம் விற்பனை செய்யும் சங்க பணியாளர்களுக்கு 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ.30/ ஊக்கத்தொகையாகவும், சங்கங்களுக்கு ஊக்கத்தொகையாகவும் வழங்கப்பட்டு வருகிறது. வருடந்தோறும் சங்கம் ஈட்டிய இலாபத்தில் பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு 50% போனஸ், பங்கு ஈவு மற்றும் ஆதரவு தள்ளுபடி தொகை வழங்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு 85% மானியத்தில் கால் நடை காப்பீட்டு வசதி செய்யப்பட்டு வருகிறது.

சங்கங்களில் பால் வழங்கி வரும் உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு வாராந்திர சிகிச்சை, அவசர கால சிகிச்சை மற்றும் மலட்டுத் தன்மை நீக்க சிகிச்சை ஆகிய மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி திட்டத்தின் கீழ் சங்கத்தில் பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு மாதம் ரூ.10/ சந்தாவில் விபத்துக்களில் இறந்தால் விபத்து காப்பீடு, திருமண உதவி தொகை வழங்கப்பட்டு வருகிறது

4 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள் மூலம் 76 சங்கங்களைச் சார்ந்த 1,816 உறுப்பினர்கள் பயன்பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சியில், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, அட்மா குழுத் தலைவர்கள் கு.பழனிவேல் (மல்லசமுத்திரம்), க.தங்வேல் (திருச்செங்கோடு), பொ.யுவராஜ் (பள்ளிபாளையம்), க.க.சண்முகம் (கபிலர்மலை), பொது மேலாளர் (ஆவின்) மரு.ஆர். சண்முகம், துணைப் பதிவாளர் (பால் வளம்) ஐ.சண்முகநதி உட்பட துறைச் சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

### கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் - நாடு போற்றும் நான்காண்டு

# தொடரட்டும் இது பல்லாண்டு!” கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!

## மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!



கோவை, ஜூன் 20-

கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் “நாடு போற்றும் நான்காண்டு” தொடரட்டும் இது பல்லாண்டு!” கழக சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளது என்று மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர், அன்புத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நான்காண்டு கால ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறும் வகையில் கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் “நாடு போற்றும் நான்காண்டு” தொடரட்டும் இது பல்லாண்டு!” கழக சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் 21.06.2025 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில், பீளமேடு ரொட்டிக்கடை மைதானத்திலும், நாளை (22.06.2025-ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 5.00 மணியளவில், இரத்தினபுரி, 7ஆம் நம்பர் பாலம் அருகில் அமைந்துள்ள கலைஞர் திடலிலும் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர், நகைச்சுவைத் தென்றல் திண்டுக்கல் ஐ.லியோனி, மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் மாநகர் மாவட்ட அவைத்தலைவர், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், கழக சொத்துப் பாதுகாப்புக்குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை மாநகராட்சி மேயர் இரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகர் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், தளபதி இளங்கோ, பொருளாளர் எஸ். எம்.பி.முருகன், தலைமைக் கழக நிர்வாகிகள் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, பி.நாச்சிமுத்து, எம்.வீரகோபால், ஆ. நாச்சிமுத்து, வழக்கறிஞர் பி. ஆர்.அருள்மொழி, அ.திராவிட மணி, டாக்டர் கோகுல் கிருபா சங்கர், அ.தமிழ்மறை, மு. இரா.செல்வராஜ், மீனா ஜெயக் குமார், நா.முருகவேல், வி. ஜி.கோகுல், விஷ்ணுபிரபு, நா.தமிழ்ச்செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி. எஸ். பி. கண்ணப்பன், வி. பாலசுப்ரமணியன், பி.ஆனந்த குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந.உதய குமார், மு.மா.ச.முருகன், ச.கார்த்திகேயன், எஸ். கே.ஆனந்தகுமார், இரா.மணி கண்டன், ஜோ.நோயல் செல்வம், வெ.சசிகுமார், எஸ்.பி. சரஸ்வதி, வடவள்ளி ச.குப்புசாமி, தங்கம் (எ) சந்திரசேகரன், பகுதி கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள்

எ. எஸ்.நடராஜ், ப.மோகன்ராஜ், கோவை லோகு, மா.நாகராஜ், இரா.சேரலாதன், துரை. செந்தமிழ்ச்செல்வன், ப.அன்பழகன், பி.கஸ்தூரி அருண், எஸ்.எம்.சாமி, சிங்கை மு.சிவா, சேக் அப்துல்லா, ஆர். எம்.சேதுராமன், பி.சிவராஜ், ப.பசுபதி, தேவசீலன், ஆ.கண்ணன், மார்க்கெட் மா.மனோகரன், என்.ஜே. முருகேசன், வி.ஐ.பதுரூதீன், சி.ராம சந்திரன், அஞ்சுகம் எம். பழனியப்பன், குட்டி (எ) சி.ஜெயசந்திரன், கே.எம்.ரவி, எ.எம். கிருஷ்ணராஜ், வ.ம.சண்முகசுந்தரம், பாபு (எ) வீ.அ.பாலசுப்பிர மணியம், பரணி கே. பாக்கியராஜ், வார்டு கழக செயலாளர்கள் ஆ.மாடசாமி, பி.ஆறுமுகம், என்.பி.செல்வமணி கலந்து கொள்கின்றனர்.

அது சமயம் மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத்தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், கழக செயல் வீரர்கள், கழகத் தொண்டர்கள், BLA2 பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### சேலம் கிழக்கு மாவட்டம்

# வீரபாண்டி வடக்கு, வீரபாண்டி தெற்கு - ஆத்தூர் மேற்கு, ஆத்தூர் கிழக்கு - தலைவாசல் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

# மற்றும் ஆத்தூர் வடக்கு, ஆத்தூர் தெற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் – அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் – தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள தலைவாசல் தெற்கு மற்றும் மத்திய ஒன்றியங்கள் இணைத்து மறு சீரமைக்கப்படுகிறது. வீரபாண்டி ஒன்றியம், ஆத்தூர் ஒன்றியம் ஆகியவை இரண்டு ஒன்றியங்களாகவும் ஆத்தூர் நகராட்சி இரண்டு நகராட்சியாகவும் பிரிக்கப்பட்டு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கபட்ட **வீரபாண்டி வடக்கு, வீரபாண்டி தெற்கு – ஆத்தூர் மேற்கு, ஆத்தூர் கிழக்கு – தலைவாசல் தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**வீரபாண்டி வடக்கு ஒன்றியம் :** 1. முருங்கபட்டி, 2. ஆனைகுட்டபட்டி, 3.கல்பாரப்பட்டி, 4. பெருமாகவுண்டம்பட்டி, 5. சேனைபாளையம், 6.வேம்படிதாளம், 7. ஆரிகவுண்டம்பட்டி, 8. கீரபாப்பம்பாடி, 9.மாரமங்கலத்துப்பட்டி, 10. மூடுதுறை, ஆகிய 10 ஊராட்சிகள் மற்றும் இளம்பிள்ளை பேரூர்.

**வீரபாண்டி தெற்கு ஒன்றியம் :** 1. இனாம்பைரோஜி, 2. பெருமாம்பட்டி, 3.பூலவாரி அக்ரஹாரம், 4. அக்கரபாளையம், 5. உத்தமசோழபுரம், 6.சென்னகிரி, 7. பெரிய சீரகாபாடி, 8. எட்டிமாணிக்கம்பட்டி, 9. கடத்தூர் அக்ரஹாரம், 10. மருளையம்பாளையம், 11. பாப்பாரப்பட்டி, 12.ராஜாபாளையம், 13. ராக்கிபட்டி, 14. வீரபாண்டி, 15. புத்தூர் அக்ரஹாரம் ஆகிய 15 ஊராட்சிகள் மற்றும் ஆட்டையாம்பட்டி பேரூர்.

**ஆத்தூர் மேற்கு ஒன்றியம் :** 1. அரசநத்தம், 2. சொக்கநாதபுரம், 3.ஈச்சம்பட்டி, 4. மல்லியகரை, 5. கூலமேடு, 6. பைத்தூர், 7. சீலியம்பட்டி, 8. தாண்டவராயபுரம் ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் கீரிப்பட்டி பேரூர்.

**ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் :** 1. அக்கிசெட்டிபாளையம், 2. கொத்தாம்பாடி, 3. அம்மம்பாளையம், 4. அப்பமசமுத்திரம், 5. கல்லாநத்தம், 6. கல்பகனூர், 7. மஞ்சினி, 8. புங்கவாடி, 9. இராமநாயக்கன்பாளையம், 10.தென்னங்குடிபாளையம், 11. துலுக்கனூர், 12. வளையமாதேவி ஆகிய 12 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **வீரபாண்டி வடக்கு, வீரபாண்டி தெற்கு – ஆத்தூர் மேற்கு, ஆத்தூர் கிழக்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**வீரபாண்டி வடக்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : எஸ். சதீஷ்குமார்**, சேலம் மாவட்டம்.

**வீரபாண்டி தெற்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : திருமதி வெண்ணிலா சேகர்,** சேலம் மாவட்டம்.

**ஆத்தூர் மேற்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : வரதராஜ்,** சேலம் மாவட்டம்.

**ஆத்தூர் கிழக்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : வே. செழியன்**, சேலம் மாவட்டம்.

**தலைவாசல் தெற்கு ஒன்றியம்**

தலைவாசல் மத்திய ஒன்றியத்தில் உள்ள **1.புனல்வாசல், 2.நாவலூர், 3.வேப்பம்பூண்டி, 4. கோவிந்தம்பாளையம், 5.சித்தேரி** ஆகிய 5 ஊராட்சிகள் தலைவாசல் தெற்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது. தலைவாசல் மத்திய ஒன்றியமானது மீதமுள்ள 14 ஊராட்சிகளுடன் தொடர்ந்து செயல்படும்.

**ஆத்தூர் நகரங்கள்**

**ஆத்தூர் வடக்கு நகரம்** : 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17 ஆகிய 17 வார்டுகள்.

**ஆத்தூர் தெற்கு நகரம் :** 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26 27, 28, 29, 30, 31, 32, 33ஆகிய 16 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **ஆத்தூர் வடக்கு, ஆத்தூர் தெற்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஆத்தூர் வடக்கு நகரம்: பொறுப்பாளர் : கே. பாலசுப்ரமணியம்,** ஆத்தூர், சேலம் மாவட்டம்.

**ஆத்தூர் தெற்கு நகரம்: பொறுப்பாளர் : ஏ.ஜி. ராமச்சந்திரன்,** ஆத்தூர், சேலம் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

# ஆர்.எஸ்.தம்பி குடும்பத்திற்கு இளைஞர் அணி நிதி உதவி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!



ஈரோடு, ஜூன் 20-

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணி செயலாளராக இருந்தபோது, ஈரோடு நகர இளைஞர் அணி அமைப்பாளராக ஆர்.எஸ்.தம்பி கழகத் தலைவர் தலைமையில் திருமணம் செய்தவர், கழகத் தலைவர் அவர்களை அழைத்து நிகழ்ச்சிகள் நடத்தியவர் என ஈரோட்டில் இளைஞர் அணியை வளர்க்க பாடுபட்டவரான ஆர்.எஸ்.தம்பி, சமீபத்தில் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார்.

இந்த நிலையில், அவரது குடும்பத்தினருக்கு கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் ரூ.50,000 நிதி உதவியாக வழங்க இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்.

அதன்படி, ஈரோடு மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. ஆகியோர் முன்னிலையில், அமைச்சர் மு. பெ.சாமிநாதன், ஆர்.எஸ். தம்பி குடும்பத்தாரிடம் நிதியை வழங்கினார்.

ஊத்துக்குளி மத்திய ஒன்றிய செயலாளர் ராஜா, இளைஞர் அணியின் ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்பாளர் திருவாசகம், ஈரோடு மாநகர அமைப்பாளர் சேந்தபுகழன், முன்னாள் மாவட்ட அமைப்பாளர் பி.கே.பழனிசாமி மற்றும் இளைஞர் அணி பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உடனிருந்தனர்.





திருவாரூர் கீழவீதியில் நடைபெற்ற மண்ணின் மைந்தர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழி நாள் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் நாஞ்சில்.சம்பத் பேசினார். மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மாநில விவசாய தொழிலாளர்அணி செயலாளர் உ.மதிவாணன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை. அசோகன்,முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்களம் ஜி. பாலு,அவைதலைவர் க. தன்ராஜ்,நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ்,ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ. தேவா,பொதுக்குழு உறுப்பினர்கள் டி.செந்தில், கே.எஸ்.எஸ்.தியாகபாரி,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார் உள்ளிட்ட மாநில,மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.